ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

03.07.2025

1. ஞான அமுதே வேலவா போற்றி
ஞானிகள் சூழ்ந்த முருகா போற்றி
தான தரும தனிப்பெருங்கருணை
தவநெறி தந்த கந்தா போற்றி

2. போற்றியே ஆறுமுக அரங்கனும்
புகழ்பாடி உன் சோதி கலந்து
ஆற்றலாக அருட்சுவடி வழியில்
அருளாசிதனை என் மக்கட்கு உரைப்பேன்

3. உரைக்கவே விசுவாவசு மிதுன திங்கள்
உயர்வான சூலவாம் குருவார ஆசி
குறைவிலா அருளாசியாக உரைப்பேன்
கூறிட என் தொண்டர் படைகள்

4. படைகளெல்லாம் கலியிடர்களை
பாடிடுவேன் தகர்த்தெறிகின்ற
படைகளாகச் சிறந்து வருக
பாடிடுவேன் உலகம் எங்கிலும்

5. எங்கிலும் வேலவன் ஆசிபட
ஏற்றமும் நல்ல மாற்றமும் தரும்
சங்கங்களாக உருவாகி நின்று
சரவண சோதி வழிபாடாக நிரம்பி

6. நிரம்பியே முருகப்பெருமானார்
நிலமதனில் வெளிப்படும் வண்ணம்
அருந்தவசிகள் எல்லாம் கூடிட
அற்புதம் கலியினில் நடக்கும்

7. நடக்கவே அரங்கன் யானும்
நன்மை கருதி துவக்கிய
இடர்வெல்லும் அன்னதான
இணையிலா சேவையை ஆதரித்து

8. ஆதரித்து உலகோர் அணுகி
அன்னதானம் வழி பொருளுதவி
உதவி செய்து பிரணவக் குடிலில்
உயர் சோதி வழிபாடு காண

9. காணவே தரும தயவு கூடி
கரும வினைகளை வெல்லும்
ஞானவான்களாகத் தேறி
ஞானிகளுடன் வேலவனார் ஆசி

10. ஆசிகிட்டி வரும் மக்கள்
அழியாமைக் காண சூட்சும
வாசி வசம் அனைத்துமே
வசமாகி ஞானிகளாவர்

11. ஆகவே இந்தப் பேருலகம்
ஆறுமுகன் ஆளுமை வரும்
செகமாக மாற்றம் காணும்
செப்பிவந்த குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி